# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு2029 மார்கழி 6 திங்கட்கிழமை (21-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 21


# தென் ஆபிரிக்க எம். பிக்கள் புலிகளுடன் பேச்சு நடத்துவர்

## இலங்கை விவகாரத்தில் முடிவு எடுக்க முன்

பிரிட்டோரியா, டிசெம்பர் 21

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேசும் வரை இலங்கை விவகாரம் தொடர்பாக தென் ஆபிரிக்கா எந்த முடிவையும் எடுக்காது

இலங்கை வந்து திரும்பிய தென் ஆபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இலங்கை வந்த தென் ஆபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கொழும்பில் ஜனாதிபதி, எதிர்க் கட்சித் தலைவர், தமிழ்க் கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோருடன் பேச்சு நடத்தியதும்—

யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததும்— தெரிந்தவையே.

இலங்கைவிஜயத்தின்போது இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்று விடுத

(10ஆம் பக்கம் பார்க்க)

## இறக்கண்டியில் மோதல்

கொழும்பு, டிசெ. 21

இறக்கண்டியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒரு சிப்பாயும் 3 விடுதலைப் புலிகளும் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கல்முனையில் உள்ள மருதமுனைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றி ஒன்று நேற்று அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகவும் —

மாங்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் தரப்பில் 4 பேர் உயிரிழந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

(இ-7)

## திருமலையில் 2 சிப்பாய்கள் காயம்

கொழும்பு, டிசெ. 21

திருகோணமலை மாவட்டத்தில் பலாபுத்து என்ற இடத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் திடீர் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படகில் இந்தியா புறப்பட்ட அகதிகள் கடலில் கைது!

மன்னார், டிசெ. 21

தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த 17 தமிழ் அகதிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை தலைமன்னாரில் இருந்து ஒரு படகில் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த அகதிகளை கடற்படையினர் கைது செய்து விசாரித்ததாகவும் —

பின்னர் அவர்கள் மன்னார் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

## கொலை செய்த நபருக்கு புலிகள் மரண தண்டனை

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

வவுனியா, டிசெ. 21

புதுக்குடியிருப்பு பொக்கணை என்னும் இடத்தில் பெண் ஒருவரைக் கொலை செய்த நபருக்கு விடுதலைப் புலிகளால் நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி இரவு புதுக்குடியிருப்பு பொக்கணைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பச்சை புல்மோட்டை என்னும் இடத்தில் 27 வயதுடைய சிவகுரு சற்குணவதி என்னும் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து முள்ளியவளையில் இந்தப் பெண் வசித்துவந்தார்.

இந்தப் பெண்ணின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பேரில் வேலுப்பிள்ளை ரவிச்சந்திரன் என்பவரை விடுதலைப் புலிகளின் காவல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை பிரபா ஆரம்பிக்கவில்லை ஐ. தே. கட்சியே ஆரம்பித்தது

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 21

வடக்கு—கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆரம்பிக்கவில்லை. இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே தனது ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்தது. இதனை அனைவரும் அறிவர்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சமுர்த்தி முகவர்களுக்கு விருது வழங்கும் வகையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி தற்போதைய அரசாங்கம் எடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் அத்திட்டங்களை அமுல்படுத்தாது சீர் குலைப்பதில் முன்னிற்கின்றது.

தற்போதைய அரசு போரைமுடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக பல்வேறு நட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆயுதங்கள்?

கொழும்பு, டிசெ. 21

முல்லைத்தீவுக் கரைக்கு அப்பால் சர்வதேச கடற் பிராந்தியத்தில் தரித்து நின்ற கப்பல் ஒன்றில் இருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் இறக்கப்பட்டனவா?

பாதுகாப்பு அதிகாரிகள் இது குறித்து ஆராய்ந்து வருகின்றனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் பிரஸ்தாப கப்பலில் இருந்து பச்சை நிறப் பெட்டிகள் புலிகளின் பட்குகளில் இறக்கப்பட்டதாகவும் இந்தப் படகுகள் முல்லைத்தீவுக் கரையை அடையும் வரை கடற் புலிகளின் படகுகள் பாதுகாப்பு வழங்கின என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பச்சை நிறப்பெட்டிகள் தவிர மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் பெரும் எண்ணிக்கையான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில்ஒரே இரவில் 7 மின் மாற்றிகள் தகர்ப்பு

மட்டக்களப்பு, டிசெ. 21

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஒரே நேரத்தில் ஏழு மின்மாற்றிகள் இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

கல்முனை பொலீஸ் பிரிவில் மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களிலும்—

அக்கரைப்பற்று பொலீஸ் பிரிவில் பனங்காடு, தம்பட்டை, நாவற்காடு, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்றுத் தொலைத் தொடர்பு பரிவர்த்தனைச் சந்தி ஆகிய இடங்களிலும்—அமைந்திருந்த மின்மாற்றிகளே தகர்க்கப்பட்டன.

இதன் காரணமாக 4 ஆயிரம் குடும்பங்களுக்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்றும்—

மின்சார சபைக்கு 29 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## அடுத்த வருட இறுதிக்குள் ஐ. தே. க. ஆட்சிக்கு வரும்

### யுத்தத்திற்கும் முடிவு என்கிறார் ரணில்

கொழும்பு, டிசெ. 21

'அடுத்த வருடஇறுதிக்குள் ஐ. தே. க. ஆட்சிக்கு வருவது உறுதியானது. நாம் ஆட்சிக்கு வந்தவுடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படுத்துவோம்.'

இப்படிக் கூறியுள்ளார் ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கதிர்காமத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கட்சியின் 44ஆவது வருடாந்த மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கதிர்காமம் பஸ்நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மண்டபத்தில் இடம் பெற்ற இம் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வுகாண்பதாக ஜனாதிபதி பதவிக்கு வருவதற்கு முன்னர் உறுதியளித்தார்.

தொடரும் யுத்தத்தைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் பயணம் செய்ய பயணச் சீட்டு இன்றி வந்த 10 பேர் கைதாகி விடுவிப்பு

திருகோணமலை, டிசெ 21

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்ட ''லங்கா முடித்த'' கப்பலில் பயணச் சீட்டு இன்றி பயணம் செய்ய முயன்றதாகச் சந்தேகித்து பத்துப் பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலை பிரதேச செயலகத்தில் இருந்து கப்பல் பயணிகள் பஸ்கள் மூலம் சீனன்குடாப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும்—

அங்கு வைத்துப் பயணிகள் கடற்படையினரால் சோதனை செய்யப்பட்ட சமயம் பயணச்சீட்டு இன்றி அங்கு காணப்பட்ட 10 பேரைக் கைது செய்தனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது

பின்னர் அவர்கள் துறைமுகப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டதுடன் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

(இ-3-10)

கலைப்பீட மாணவர் ஒன்றிய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு இல. 02325
2ஆம் பரிசு இல. 04623
3ஆம் பரிசு இல. 00361

பரிசு பெற்றவர்கள் குறித்த இலக்கமுடைய தமது பற்றுச் சீட்டைக் காட்டித் தமது பெயர், விவரங்களை கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

- செயலாளர்

(61483)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன சக மாணவி
சி. ஆர்த்திகாவின் அருமைத் தாயார்
**சி. இராஜேஸ்வரி**
அவர்கள்

சிவபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்,
ஆண்டு 10 மாணவர்கள்,
மணி கல்வி நிறுவனம்.

( 61487 )

## கண்ணீர் அஞ்சலி

மாவட்டப் புள்ளிவிவரவியலாளர்
ந. சிவகுமார்
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி சி. இராஜேஸ்வரி**

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புள்ளி விவரக் கிளை உத்தியோகத்தர்கள்
புள்ளிவிவரக் கிளை,
செயலகம், யாழ்ப்பாணம்.

(61484)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
**இராஜேஸ்வரி சிவகுமார்**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி சிவகுமார் 20-12-1998 இல் கொக்குவிலில் காலமானார்.

அன்னார் சிவகுமாரின்(மாவட்ட புள்ளி விவரவியலாளர், யாழ்ப்பாணக் கச்சேரி) அன்பு மனைவியும், ஆர்த்திகாவின் (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) அன்புத்தாயும், காலஞ் சென்றவர்களான ராஜா, தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற V. M. நடராஜா, அன்னம் ஆகியோரின் அன்பு மருமகளும், பாலேந்திரா (கனடா), ராஜயோகமணி, கெங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயக்குமார் (ஆஸ்திரேலியா), சாந்தகுமாரி, பிரேமகுமாரி(ஜேர்மனி), உதயகுமாரி, தேவகுமாரி(கச்சேரி, யாழ்ப்பாணம்), சாம்பவி, யசோதா (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று(21-12-98) திங்கட்கிழமை முறபகல் 11மணியளவில் கொக்குவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவகுமார்
(கணவர்)

''குமாரோதயம்'',
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(61474)

## சுப்பையா அழகரத்தினம்

பொற்பதிறோட் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் 19-12-98 இல் காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற சுப்பையா செல்லாச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் இராமநாதன், சிதம்பரநாதன், விவேகானந்தன், சிவாநந்தன், நித்தியாநந்தன், அனுசியாதேவி, சாரதாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற மலரானந்ததேவி மற்றும் சந்திராதேவி, உலகேஸ்வரி, மகேஸ்வரி. இரத்தினமலர், ரஜனி (மருமகள்), யோகசுந்தரம், குணரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-12-98 செவ்வாய்க்கிழமை கொழும்பில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அ. இராமநாதன்.
(மகன்)

(61482)

## ஸ்ரீ செல்வா

சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
அர்ஜுன் (கௌரவ வேடம்)
ஜெயராம், பானுப்பிரியா
நடித்த
**கோகுலம்**
(நேரடி CD)
தினசரி: 10-30, 2-30
( பழைய நேரம் )
(61489)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, ரோஜா
ஜனகராஜ், செந்தில்
நடித்த
**வீரா**
தினசரி
10.30, 2.00
சனி, ஞாயிறு
10-30, 2-00, 5-00
(சி/5711)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று முதல்
முரளி, ரம்பா,
விஜயகுமார், நாஷர்
நடித்த
**தேசியகீதம்**
வியாழன் முதல்
சாருஹான், மானிஷா
நடித்த
**உயிரே**
தினசரி- 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(61369)

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.
திரைப்படக் கூட்டுத்தாபன ரீல்ஸ்படம்
அஜித், தேவயானி,
மணிவண்ணன்
நடித்த
**காதல்கோட்டை**
காட்சிகள்: 10-30, 2-30
(61490)

## வகுப்பறை கொட்டில்கள் வேய நிதி

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் உள்ள தற்காலிக வகுப்பறைக் கொட்டில்களை உடனடியாக வேய்வதற்கு வடமராட்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ் வேலைகளை அடுத்த ஆண்டு முதலாம் தவணை தொடங்குவதற்கு முன்னர் செய்து முடிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (ஐ-118)

## புதுவருட மலிவு விற்பனை!

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
கொழும்பு
"ஓசானிக் இம்பெக்ஸ்"
நிறுவனத்தின் அனுசரணையுடன்
அனைத்துப் புடைவைகளும் விசேட கழிவுடன்
மலிவு விலையில் வாங்கிக்கொள்ள

**சீமாட்டி**
**(புடைவைக் கடல்)**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 021 - 2196
(சி/5841)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை

**பாதணிகள் கண்காட்சி**

மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நடைபெறுகின்ற பாதணிகள் கண்காட்சி 21 - 12 - 98 இன்று திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கௌரவ செயலாளர்
இ. செ. ச. யாழ். கிளை.

(சி/5841)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவபாதம் சுதாகரன்**
பிறப்பு: 09 — 04 — 1978
இறப்பு: 21 — 12 — 1996



**சின்னத்துரை அரியதாஸ்**
பிறப்பு: 08 — 12 — 1975
இறப்பு: 21 — 12 — 1996

இரண்டு ஆண்டுகள் சென்றதுவோ நீர் எமை விட்டுப் பிரிந்து
புரண்டு புரண்டு அழுதாலும் வருவீரோ எம்முடன் பேசுவதற்கு?
திரண்டு எல்லோருமாய்ச் சேர்ந்து இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;
மிரண்டு விழிக்கிலுறோம்; உமது நினைவலைகளை எண்ணி எண்ணி!

உங்கள் பிரிவால் துயருறும்

அம்மா: சி. சகுந்தலாதேவி
அப்பா: வ. சிவபாதம்
தம்பிமார்: சி. சிவாகரன்
சி. பிரபாகரன்
தங்கைமார்: சி. நதியா சி. நளினி
மாமன்மார்:
கி. சிவராசா
கி. கோடீஸ்வரன்
கி. தெய்வேந்திரம்
கி. கிருஸ்ணபவான்
செ. ஞானப்பிரகாசம்
செ. ஸ்ரீதரன்
சித்திமார்: கி. நாகேஸ்வரி
கி. நாகபூசணி கி. செல்வராணி
கி. கமலராணி கி. வசந்தராணி

அம்மா: சின்னத்துரை யோகேஸ்வரி
அக்காமார்: சி. சித்திரா, சி. கமலா
தம்பி: சி. சிவாகரன்
மச்சான்: தெய்வேந்திரம்
மருமக்கள்: தர்சிகா, தர்சனா,
பிரசாந், தர்சன்
அம்மம்மா: பொன்னம்மா
மாமன்மார்: ஆ. சத்தியசீலன்
ஆ. விக்கினேஸ்வரன்
ஆ. மகேஸ்வரன்
ஆ. பரமானந்தன்
சித்தப்பாமார்: சுந்தரலிங்கம்
சண்முகம்
அண்ணாமார்: ச. பாலகுமார்
ச. மோகனதாஸ்

மறவன்புலவு, சாவகச்சேரி.

(சி/5842)

### வடமராட்சி கிழக்குப் பகுதியில்

# பரீட்சை நிலையம் அமைக்காததைக் கண்டித்து கூட்டத்தில் தீர்மானம்

செம்பியன்பற்று, டிசெ. 21

வடமராட்சி கிழக்கில் ஜி. சி.ஈ சாதாரணதரப்பரீட்சை நிலையம் எதுவும் அமைக்கப்படாததை ஆட்சேபித்து கடந்த புதன்கிழமை மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கண்டனத்தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த உதவி அரச அதிபர் பரீட்சை நிலையத்தை மாற்ற வேண்டாம் எனக் கோரும் அவசரக்கடிதம் ஒன்றை மாணவர்களின் கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி அனுப்பியதாகவும் ஆனால் கல்வித்திணைக்களம் மாற்று நடவடிக்கை எடுக்காமல் பரீட்சையைப் பருத்தித் துறைப் பகுதியில் நடத்தி வருவதால் சபையில் கொண்டு வரப்பட்ட இத் தீர்மானத்தை ஏற்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார். இதனை அடுத்து சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'வலயம்3ஐ கண்டிக்கிறோம்' என்ற தலையங்கத்துடன் பெற்றோர்களின், மாணவர்களின் பெயரில் சுவரொட்டிகளும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

(ஐ-36)

## ஒளி விழாக்கள்

நெல்லியடி, டிசெ. 21

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் ஒளிவிழா இம் மாதம் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

கரவை கத்தோலிக்க இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கரவெட்டி பங்குத்தந்தை, எம்.ஜேசுரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-109)

★ ★ ★

செம்பியன்பற்று, டிசெ. 21

வடமராட்சி கிழக்கு மாமுனையில் உள்ள தையற் பயிற்சி நிலையத்தில் நாளை செவ்வாய் காலை 10.00 மணிக்கு ஒளிவிழா நிகழ்வு இடம்பெற உள்ளது.

(ஐ-36)

★ ★ ★

செம்பியன்பற்று, டிசெ. 21

வடமராட்சி கிழக்கு குடத்தனை தென் இந்தியத் திருச்சபையின் ஒளிவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு இடம்பெறும் என அருட்தந்தை சு. குகனேஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ-36)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஒளிவிழா இம மாதம் 30 ஆம் திகதி சங்கத் தலைமையகத்தில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக மருதங்கேணி செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட குழு உறுப்பினருமான சி. ஏ. ஸ்ரனிஸ்லோஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

ஒளி விழாவில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களின் கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-5)

★ ★ ★

வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் ஒளிவிழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கிறிஸ்தவப் பெரியார்கள் அருளுரை வழங்குவார்கள். இவ்விழாவின் பிரதம விருந்தினராக பளை பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்.

(ஐ-99)

# வலயம் - 3 அலுவலகம் புலோலியில் இயங்கும்

யாழ். கல்வி வலயம் மூன்று பணிமனை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செயற்படவுள்ளது.

இது வரை காலமும் கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த இந்த அலுவலகம் நிரந்தரமாக புலோலியில் இயங்கவுள்ளது.

இக் கல்வி வலயம் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்குவதற்காக அப் பாடசாலை சுமார் 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதற்கான நிதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்திருந்தார்.

(ஐ-118)

# மாதம் 5 ஆயிரம் ரூபா மட்டுமே தருகிறார்!

## சனத்தின் மனைவி மனு!

கொழும்பு டிசெ. 21

பிரபல கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரியாவின் மனைவி சுமுது உதார கருணநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமையன்று கொழும்பு மாவட்ட நீதி மன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தனது கணவரான சனத் ஜெயசூரியா மாதமொன்றுக்கு பல இலட்சம் ரூபாக்களை உழைக்கும் போதிலும் தனக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்குவதாகவும்—

தான் செய்து வந்த வேலையைக் கைவிடுமாறு அவர் தெரிவித்ததால் தான் அந்த வேலையை இராஜினாமாச் செய்து விட்டதாகவும்—

மனுவில் தெரிவித்துள்ளார்.

ஜெயசூரியா தொடர்ந்துள்ள விவாகரத்து வழக்குக் செலவு செய்ய தன்னிடம் பணமில்லையெனவும்—

எனவே இந்த வழக்கை நடத்துவதற்குச் செலவாக ஜெயசூரியாவிடமிருந்து 4 இலட்சம் ரூபா பெற்றுத் தருமாறும்—

அவர் அந்தமனுவில் மேலும் கோரி உள்ளார்.

சனத் ஜெயசூரியாவுக்கு மாதமொன்றுககு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வழங்குவதாகவும் — அவர் யூனியன் வங்கியில் பணியாற்றுவதால் மாதமொன்றுக்கு சம்பளமாக 85 ஆயிரம் ரூபா பெறுவதாகவும் சுமுது தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார்.

(ஐ-5-10)

# வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடுகள்

கொழும்பு, டிசெ. 21

வடமேல் மாகாணத்திலுள்ள ஆயிரத்து 300 பாடசாலைகள் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்காக ஜனவரி 25 ஆம் திகதியன்று மூடப்படவுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் 800 வாக்களிப்பு நிலையங்களும், புத்தளம் மாவட்டத்தில் 360 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் பெரும்பாலானவைபாடசாலைகளில் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் கடமைகளில் 12 ஆயிரத்து 500 ஊழியர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

வடமேல் மாகாணசபைக்கு 52 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். 446 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் 13 இலட்சத்து 59ஆயிரத்து 295 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

(ஐ-5-10)

# பூந்தோட்டம் முகாம் மக்கள் வசதி இன்றி அவதி

வவுனியா, டிசெ. 21

வவுனியா பூந்தோட்டம் பகுதி அகதி முகாம்களில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி சஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிய அறைகளில் பல குடும்பங்களையும் சேர்ந்த பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளும் முகாம்களில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாம்களிலுள்ள 130 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-5)

## வடமராட்சி பயணிகள் வந்தனர்

'லங்கா முடித்த' கப்பலில் திருகோணமலையிலிருந்து நேற்று முன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த பயணிகளில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 200 பயணிகள் 5 மினிபஸ் வண்டிகளில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வடமராட்சியை வந்தடைந்தனர்.

(ஐ-173)

## விநியோகம்

மூளாய், டிசெ. 21

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் 69'ஏ' 'பி' புள்ளிகளுக்குரிய நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலமாக இவ்விநியோகம் நடைபெறுகிறது.

(ஐ-99)

# நிவாரண விநியோகம் வலி. வடக்கில் தாமதம்

வலி வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில்69'ஏ' 'பி' புள்ளிகளுக்கான நிவாரணப் பொருட்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

கடந்த முறையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பொருள் விநியோகம் முடிந்து நீண்ட நாள்களின் பின்பே இங்கு விநியோகம் செய்யப்பட்டது.

69'ஏ' 'பி' புள்ளிக்கான நிவாரண விநியோகத்திற்கான பட்டியல்கள், கொள்வனவுக் கட்டளைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னும் விநியோகஞ் செய்யப்படவில்லை.

(ஐ-86)

## வாசகர் திருமுகம்

### நிவாரணத்துக்கு தரமற்ற அரிசி

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் ப. நோ. கூ. சங்கத்தில் நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி பழுதடைந்த நிலையில் உள்ளது.

வழங்கப்படும் அரிசியின் நிறையில் அரைப்பங்கு புழுக்கூடு பிடித்தே காணப்படுகிறது. பாவனைக்குதவாத இந்த அரிசியினால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழுதடைந்த அரிசி விநியோகம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் இங்கு நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருட்களிலும் நிறை குறைவு காணப்படுகின்றது.

எனவே பாவனையாளர்களின் நலன்கருதி அவர்களுக்குத் தரமான அரிசியும், உரியளவு பொருள்களும் வழங்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ச. கிருபாலினி

தாளையடி.

### ஊக்குவிக்கப்பட வேண்டிய சித்திர, சிற்பக் கலைகள்

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பாடத்திட்ட நடைமுறையில் சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய அழகியற் பாடங்கள் உள்ளன. எனினும் சங்கீதம், நடனம் ஆகிய இரு பாடங்களுக்கு மட்டுமே பெரும்பான்மையான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரப் பாடத்துக்கான நிரந்தர ஆசிரியர்கள் அநேக பாடசாலைகளில் நியமிக்கப்படவில்லை. இப் பாடங்களைப் போதிக்கும் தொண்டர் ஆசிரியர்களும் இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை.

சித்திர, சிற்ப ஆசிரியர் தெரிவுக்கு உரிய படிவங்கள் எம்மால் அனுப்பப்பட்டும் பயனெதுவும் கிடைக்கவில்லை.

1999 ஆம் ஆண்டில் ஜி. சீ. ஈ. சாதாரண தரத்துக்கு நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத்துக்கான ஆசிரியர் தெரிவும் இதுவரை இடம்பெறவில்லை.

தொன்மைமிக்க இக்கலைகள் வளர்க்கப்படவேண்டியது அவசியமானதாகும். இதன் முக்கியத்துவம் கருதி சித்திரம், சிற்பம், நாடகம் ஆகிய கலைகளை மேம்படுத்துவதற்கு கல்வித்துறைசார் அதிகாரிகள் தமது பங்களிப்பினையும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்களா ?

'கலைஞர்கள்'

யாழ்ப்பாணம்.

### கட்டுப்படுத்தப்பட வேண்டிய கட்டாக்காலி நாய்கள்

அண்மைக் காலங்களில் யாழ். நகரப்பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

கட்டாக்காலி நாய்களினால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றின் நடமாட்டம் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிப்பதும் ஆகும்.

உதாரணமாக நாய்களின் எச்சம், உடற்குட்டை போன்றவற்றினால் தொற்று நோய்கள் பரவும் அபாயமுள்ளது. நாய்களின் எச்சங்களை பாதசாரிகள் மிதிக்கும் போதும், எதிர்பாராத விதமாக இந்நாய்களைத் தீண்டும் போதும், காற்றின் மூலமும் நோய்க்கிருமிகள் தொற்ற அதிகளவில் வாய்ப்புண்டு.

நாய்களின் தொல்லைகள் குறித்தும், அவற்றைக் கட்டுப்படுத்துமாறு வேண்டியும் யாழ்.மாநகரசபையை கடித மூலமும், நேரில் கோரியும் திருப்திகரமான முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. கட்டாக்காலி நாய்கள் இன்னமும் பெருமளவில் அழிக்கப்பட்டு கட்டுப்பாட்டிக்குள் கொண்டு வரப்படவில்லை.

அண்மையில் நாய்கள் சைக்கிள்களின் இடையில் புகுந்து ஏற்பட்ட விபத்தால் சைக்கிளோட்டிக்கு மிகுந்த காயங்கள் உண்டாகியதுடன், சைக்கிளும் பலத்த சேதத்துக்குள்ளானது. கனரக வாகனங்களின் போக்குவரத்துக்குக்கூட நாய்கள் இடையூறாக உள்ளன.

எனவே பொதுமக்களின் நலன்கருதி கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கையை மேற்கொள்வார்களா ?

யாழ். நகரவாசி

# சனி இரவு குண்டு வீச்சின்பின் 'பாலைவன நரி' தாக்குதல் நிறுத்தம்!

வாஷிங்ரன், டிசெ- 21

**அமெரிக்காவும்— பிரிட்டனும் கூட்டாக கடந்த நான்கு இரவுகள் ஈராக் மீது நடத்தி வந்த ஒப்பரேஷன் 'டெசேர்ட் பொக்ஸ்' (பாலைவன நரி) வான்வழித் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு விட்டதாக நேற்று அதிகாலை அறிவிக்கப் பட்டது.**

பக்தாத் மீதான நான்காவது கட்ட இரவு நேர வான்தாக்குதலின் பின்னர் நடவடிக்கை நிறைவு பெற்று விட்டதாக அதிபர் பில் கிளின்ரனும், பிதமர் ரொனி பிளயரும் அறிவித்தனர்.

'எமது நோக்கம் எட்டப்பட்டு விட்டது' என்று அதிபர் கிளின்ரன் வாஷிங்ரனில் தெரிவித்தார்.

ஈராக்கின் இராணுவ வசதிகளுக்கு இந்த நடவடிக்கை விரிவான சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆயினும் வளைகுடா பிரதேசத்தில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் உள்ள குர்திஷ் இனத்தவரை அல்லது அயல் நாடுகளை அதிபர் சதாம் ஹுசேய்ன் மிரட்டுவாரேயானால் இராணுவத்தைப் பயன்படுத்த அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் கிளின்ரன் கூறினார்.

ஈராக் மீதான கடைசி வான் தாக்குதல்கள் முடிவடைந்து விட்டதாக பிரதமர் ரொனி பிளயர் லண்டனில் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

முன்னதாக அமெரிக்க — பிரிட்டிஷ் படைகள் சனிக்கிழமை நான்காவது தடவையாக பக்தாத்தைத் தாக்கின. ஈராக்கியப் படைகளும் பதிற் தாக்குதல் தொடுத்தன. (ஐ)

## சதாமைத் தூற்றும் வாசகங்கள்

பக்தாத், டிசெ. 21

ஈராக் மீதான தாக்குதலுக்கு 'பாலைவன நரி' என்று அமெரிக்காவும், பிரிட்டனும் உத்தியோக பூர்வமாகப் பெயர் சூட்டியுள்ள போதிலும் அந்த நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் அதனை 'சதாமைக் கொல்வதற்கான நடவடிக்கை' (Operation Killing Sadham) என்று பெயரிட்டே செயற்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

பக்தாத் மீது பொழியப் பட்ட ஏவுகணைகளில் அதிபர்சதாமைத் தாறுமாறாகத் திட்டி கையால் எழுதிய வாசகங்களும் காணப்பட்டுள்ளன. (ஐ)



அமெரிக்காவின் வான் தாக்குதல்கள் கடந்த புதனன்று இரவு ஆரம்பமாகிய பின்னர் கடந்த சனியன்று அதிபர் சதாம் ஹுசேய்ன் நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய போது பெறப்பட்ட படம் இது.

'' பிசாசுகள் வெற்றிபெற அனுமதிக்கப் போவதில்லை '' என்று அந்த உரையில் சதாம் குறிப்பிட்டார். (ஐ)

( படம்: சீ. என். என். )

## அபாயமணி ஓயவில்லை

ஈராக் மீதான வான்வழித் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு விட்டதாக அமெரிக்காவும் பிரிட்டனும் அறிவித்த பின்னரும்— நேற்றுக்காலை— பக்தாத் நகரில் விமானத் தாக்குதல் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதாக வெளி நாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

## பக்தாத் நகரில் மகிழ்ச்சி ஆரவாரம்

பக்தாத், டிசெ. 21

தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருப்பதாக அமெரிக்காவும், பிரிட்டனும் அறிவித்ததை அடுத்து நேற்றுக் காலை பக்தாத் நகர வீதிகளில் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சுமார் 70 மணிநேரமாக நடத்தப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கையின் போது ஈராக்கின் 90 இலக்குகள் தாக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஐ)

## 'பாத்' கட்சி தலைமையகம் குண்டினால்பலத்தசேதம்!

பக்தாத், டிசெ. 21

பக்தாத் நகரில் உள்ள அதிபர் சதாம் ஹுசேய்னின் ஆளும் 'பாத்' (BAATH) கட்சித் தலைமையகமும் விமானத் தாக்குதலினால் பலத்த சேதமடைந்துள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பக்தாத்தின் குடிசியா மாவட்டத்தில் அமைந்துள்ள கட்சித் தலைமையகக் கட்டடத்தின் இரண்டு பிரதான கட்டடத் தொகுதிகள் மீது ஏவுகணைகள் வீழ்ந்துள்ளன.

தாக்குதல் நடந்த சமயம் அக்கட்டடம் பாவனை இன்றிக் கைவிடப்பட்டிருந்ததாகவும், அதனால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது (ஐ)

## பதுங்கு குழிகளுக்குள் 'குர் ஆன்' ஓதிய மக்கள்

பக்தாத், டிசெ. 21

பக்தாத் நகர மக்கள் நோன்பு நோற்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்த போதே அமெரிக்காவின் வான் தாக்குதல்கள் ஆரம்பமாகின. இது ஈராக்கியர்களை மட்டுமன்றி உலக முஸ்லிம்களையும் வேதனைக்குள்ளாக்கியது.

சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற தாக்குதல் மக்கள் நோன்பு ஆயத்தங்களைத் தொடங்கிய போது— அதிகாலை 4. 35 மணிக்கு— இடம்பெற்றது. தாக்குதல்களில் இருந்து தப்பிக்கொள்ள மக்கள் பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்தனர். சிலர் பதுங்கு குழிகளுக்குள் இருந்தவாறே குர் ஆன் ஓதி நோன்பு நோற்றனர்.

நோன்பு காலம் உலகெங்கும் ஆரம்பமாகிய வேளை தாக்குதலை நீடிப்பது பாதகமாக அமையும் என்பதாலேயே நேற்றுடன் வான் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது. (ஐ)

## வரலாற்று நூதனசாலையும் தாக்குதலுக்குத் தப்பவில்லை!




பக்தாத், டிசெ, 21

அமெரிக்க நேசப் படைகள் நடத்திய குண்டு வீச்சுகளின் போது பக்தாத்தில் உள்ள வரலாற்று தொல்பொருள் சாலையும் (Natural History Museum) சேதமடைந்திருக்கிறது.

நகரில் சேதங்களைப் பார்வையிட்ட மேற்குலக பத்திரிகையாளர்கள் இதனை உறுதி செய்துள்ளனர்.

அருகில் ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்த அதிர்வுகளால் இச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அமெரிக்க சார்பு அவதானிகள் கூறியுள்ளனர்.

சேதமடைந்த தொல்பொருள் சாலையின் முகப்புத் தோற்றத்தை மேலே நடுவில் உள்ள படத்திற் காணலாம்:

அமெரிக்க — பிரிட்டிஷ் விமானங்களை இலக்கு வைத்து ஈராக் படைகள் ஏவிய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பக்தாத் வானில் ஏற்படுத்திய ஒளிக்கீற்றுக்களை முதற் படத்திலும் —

தாக்குதல் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் விடுமுறைக்காக நாடு திரும்பத் தயாராகிவரும் அமெரிக்கத் துருப்புக்களை மூன்றாவது படத்திலும் காணலாம் (ஐ)

## பிரதிநிதிகள் சபைகண்டித்தது பதவிவிலக கிளின்ரன் மறுப்பு!

பொய்யான சாட்சியம் அளித்தமை, நீதி வழங்குவதற்குத் தடையாக இருந்தமை, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தமை ஆகியவற்றுக்காக அமெரிக்க பிரதிநிதிகள் சபை அதிபர் பில் கிளின்ரனைக் கண்டித்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களின் பேரில கொண்டுவரப்பட்ட அரசியல்குற்ற விசாரணைப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பிரேரணை நிறைவேற்றப்பட்டசிறிதுநேரத்தில் கருத்து வெளியிட்ட அதிபர் கிளின்ரன் பதவி விலகல் கோரிக்கையை அடியோடு நிராகரித்தார்.

தனிநபர்களை ஒழித்துக்கட்டும் இத்தகைய அரசியலை ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும்-

தனது பதவிக் காலத்தின்



கடைசி நாள் வரை அமெரிக்காவின் அதிபராகத் தொடர்ந்து இருக்கப்போவதாகவும்-

அவர் தெரிவித்தார்.

அதிபருக்கு எதிரான 4 குற்றச்சாட்டுக்களில் இரண்டையே பிரதிநிதிகள் சபை நிலைநிறுத்தி உள்ளது. இவற்றில் ஒன்றைக் கூட செனற் சபை அங்கீகரிக்குமாயின் அதிபர் பதவி விலக வேண்டி இருக்கும். ஆனால் 100 உறுப்பினர்களைக்கொண்ட செனற்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இதற்கு அவசியம். செனற்றில் கிளின்ரனின் ஜனநாயகக் கட்சிக்கு 55 உறுப்பினர்கள் உள்ளனர்.

அதிபர் மீதான கண்டனத் தீர்மானம் தொடர்பான விவாதம் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## சதாமா? கிளின்ரனா? முதலில் கவிழ்வது யார்?

லண்டன் (ராய்ட்டர்), டிசெ. 21

முதலில் கவிழப் போவது அமெரிகக ஜனாதிபதி பில் கிளின்ரனா அல்லது ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்னா; என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கேள்வியெழுப்பியிருக்கின்றன.

அமெரிக்க போர் விமானங்களும், பிரிட்டிஷ் போர் விமானங்களும் ஈராக் மீது மூன்றாவது நாளாகவும் தாக்குதல்களை நடத்திய நிலையில், பிரிட்டனின் சிறிய பத்திரிகைகளும், பெரிய பத்திரிகைகளும் யார் முதலில் கவிழ்வது என்ற தொனியில் தலையங்கங்களை ஒரே பாணியில் தீட்டியிருக்கின்றன.

'தோல்வி நிச்சயும் யாருக்கு முதலில்' என்று பிரிட்டனில் கூடுதலாக விற்பனையாகும் 'சண்' பத்திரிகை அதன் தலையங்கத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறது.

'பரமவைரிகளான சதாம் ஹுசேய்னுக்கும் பில் கிளின்ரனுக்கும் பொதுவில் ஒன்று இருக்கிறது. தோல்வி தான் அது' என்று 'சண்' தெரிவித்திருக்கிறது.

ஆபத்தில் இரு ஜனாதிபதிகள்; முதலில் கவிழ்க்கப்படுவது யார்? என்று கார்டியன் பத்திரிகை கேள்வி எழுப்பியிருக்கிறது.

கிளின்ரனுக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை அடுத்த மாதம் அமெரிக்க செனற் சபையில் விவாதிக்கப்பட இருப்பது தெரிந்ததே (ஐ)

பருத்தித்துறை நகராட்சி மன்றம்

## 1999-ம் ஆண்டுக்கான ஆதன வரி அறிவித்தல்

ஆதன மீள் மதிப்புக்கமைவாக, இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதன வரித்தொகைகளே 1999-ம் ஆண்டுக்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தப்படற்பாலதென வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாதன வரித்தொகைகள் 1999-ம் ஆண்டு மார்ச் மாதம் 31, ஜூன் மாதம் 30, செப்ரெம்பர் மாதம் 30, டிசெம்பர் மாதம் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 1999-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதன வரியையும் செலுத்தினால் 10 வீத வரிக்கழிவும் காலாண்டுக்குரிய ஆதன வரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 5 வீத வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதன வரித்தொகைகளுக்குப் பற்றாணைச் செலவு அறவிடப்படும். அப்பற்றாணைச் செலவு வெற்றுக்காணிகளுக்கும் குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15 வீதமாகவும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமாகவும் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட வரி மதிப்புக்கு எதிர்சொல்லுதல் ஏதுமிருப்பின், அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்த நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப்பகுதிக்குரிய ஆதன வரி செலுத்தப்படாவிட்டால், குடியிருப்போரின் பொருள்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதைக் குடியிருப்போர் கவனிக்க வேண்டும். வாடகைக்காரர்கள், தாங்கள் குடியிருக்கும் ஆதனத்திற்குரிய வரியைச் செலுத்தி, அத்தொகையை வாடகையில் குறைத்துக்கொள்ளலாம்.

வ. விசயரட்ணம்
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 14-12-1998. (சி-5833)

## ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கம் நிர்வாகசபைத் தெரிவு

14-12-98 இல் நடைபெற்ற ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாக சபை உறுப்பினர்களாக கீழ் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு. வ. அஞ்சலோ
உபதலைவர்:- திரு. தி. கிறிஸ்ரியான்சன்
செயலாளர்:- திரு. இ. மரியதாஸ்
உபசெயலாளர்:- திரு. யோ. டொன்பொஸ்கோ
பொருளாளர்:- திரு. மு. சு. இராசரெட்னம்

அத்துடன் ஒவ்வொரு தொழில் சார்ந்த உறுப்பினர்களாக மேலும் 10 உறுப்பினர்கள் தெரிவாகினர். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இதுவரை அங்கத்துவம் பெறாத வர்த்தகர்கள் சந்தாவைச் செலுத்தி உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளலாம்.

வ. அஞ்சலோ
தலைவர்
வர்த்தகர் சங்கம், ஊர்காவற்றுறை.

(61450)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 12 — 04 — 1921

உதிர்வு 21 — 11 — 1998

அமரர்

**சின்னத்தம்பி கற்பகம்**

(அச்சுவேலி வடக்கு - அச்சுவேலி)

எங்கள் அன்புத் தெய்வமே! பாசமிகு அம்மாவே!
பண்பின் உறைவிடமே நாமிருக்க எங்கு சென்றீர்?
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு - ஆனாலும்
அம்மாவென்று யாரை இனி அழைப்போம்?

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இரத்தினம் - தனம்
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (61446)

# துப்பாக்கிச் சூட்டு சத்தத்தை அடுத்து மனைவி கதறிக் கொண்டு வந்தார்

## கிளாலி சம்பவத்தில் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 21

சரமாரியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களை தொடர்ந்து வெளியே வந்த எனது மனைவி தனது பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் அறைக்குள் வைத்து ஆமிக்காரன் சுட்டு விட்டான் என்று குழறிக்கொண்டு வந்தார்.

இவ்வாறு கிளாலியில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பான மரண விசாரணையில் சாட்சியமளித்த ஞா. இன்னாசிமுத்து (62 வயது) என்பவர் தெரிவித்தார். கடந்த வெள்ளியன்று இரண்டாவது தடவையாக சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவானும் மரண விசாரணை அதிகாரியுமான க. கேசவன் இந்த விசாரணையை நடத்தினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இந்தச் சம்பவத்தில்காலஞ்சென்றவர்களான அ. அமிர்தராஜ், அ. அமில்ரன் ஆகியோர் எனது பேரப்பிள்ளைகளாவர்.

கடந்த 7 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் இரவுப் போசனத்தை முடித்து விட்டு எனது குடிசைக்குள் படுத்திருந்தேன்.

அப்பொழுது எனது அருகே படுத்திருந்த எனது வீட்டு நாய் வெருண்டு குரைத்துக் கொண்டு பின்னோக்கி ஓடியது. நான் உடனே படுக்கையைவிட்டெழுந்து கையில் வைத்திருந்த ''ரோர்ச் லைற்''றை அடித்துப்பார்த்த போது எனக்கு முன்னால் இருவர் துப்பாக்கி ஏந்தியபடி நிற்பதைக் கண்டேன்.

அவர்களில் ஒருவர் ரீசேட்டும் ரன்னிங் சோட்ஸும் அணிந்திருந்தார் மற்றவர் இராணுவச் சீருடையிலிருந்தார். அவரது தோளில் ''வாக்கி டோக்கி'' கொழுவி இருந்தது.

சீருடை அணிந்தவர் என்னைப் பிடித்திழுத்து சத்தம் போடக் கூடாதென்று கூறி குடிசைக்கு வெளியே றோட்டுக்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது மழை இரைந்து கொண்டு வந்தது. எனது குடிசைக்கு அருகிலுள்ள சங்கக்கடை கட்டடத்துக்கு முன்பாக என்னை இருக்க விட்டு சீருடை அணிந்தவர் பக்கத்திலிருந்தார்.

ரன்னிங் சோட்ஸ் அணிந்தவர் எனது மகள் குடியிருக்கும் நூல் நிலைய கட்டடத்தை நோக்கிச் செல்லவைக் கண்டேன். அவர் சென்ற சில நிமிடங்களில் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அத்துடன் எனது பேரப்பிள்ளைகள் வீறிட்டுக் கதறும் சத்தமும் கேட்டது.

நான் அங்கே சென்ற பொழுது கட்டடத்துக்கு வெளியே எனது மகள் மற்றும் அவரது மகன் ஆகியோர் காயங்களுடன் நிற்பதைக் கண்டேன்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

சாட்சியத்தைப் பதிவு செய்து கொண்ட நீதிவான் சம்பவத்தில் காயமடைந்த அ. அமிர்தராணி காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியிலிருப்பதால் இச்சம்பவம் தொடர்பான அடையாள அணி வகுப்பையும், மேலதிக மரண விசாரணையையும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (இ-5)

## பாதணிகள் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது

நல்லூர் டிசெ. 21

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஆதரவில் நடைபெற்ற பாதணிகள் கண்காட்சியை யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

வதிரியில் உள்ள செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் பயிற்சிப் பாடசாலையில் பயின்ற மாணவர்களினால் உருவாக்கப்பட்ட பாதணிகள் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பை, சிறிய பேஸ்வகைகள் கண்காட்சியில் இடம் பெற்றன

காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்கள் மிகச் சிறந்த முறையிலும் நேர்த்தியாகவும் தயாரிக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (இ-103)

## வரவு - செலவுத் திட்டம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 21

சாவகச்சேரி பிரதேச சபையின் 1999 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச சபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பிரதிநிதி எஸ். சிவராசலிங்கம், சபையின் பதில் செயலாளர் எஸ் பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி பிரதேச சபை எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மயான புனரமைப்பு, குடிதண்ணீர்ப் பிரச்சினை, வீதிகள் திருத்துதல், சந்தை திருத்தம். வடிகாலமைப்பு போன்ற வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலுக்கு முன்னதாக சாவகச்சேரிப் பிரதேச சபையின் பதில் செயலாளராகத் தற்பொழுது பளைப் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றும் எஸ். பாலச்சந்திரன் பதவியேற்றுக் கொண்டார்.

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்பின் பேரிலே இவர் பளையுடன் சேர்த்து இந்தப் பிரதேச சபையின் பதில் செயலாளராகவும் கடமையாற்றவுள்ளார்.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் செயலாளராகக் கடமையாற்றிய வே. அநுணந்தி திடீரென கொழும்பு சென்றுவிட்ட காரணத்தினாலே தற்பொழுது பதில் செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## தென்னங்கன்று விநியோகம்

மானிப்பாய், டிசெ. 21

வலி. தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு இலவச தென்னங்கன்றுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் பட்டினத் தலைமைச் செயலகத்தில் வைத்து சனசமூக நிலையங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்துள்ளார். (ஐ-90)

## நத்தாருக்குப் பொதுமன்னிப்பு இல்லை

கொழும்பு, டிசெ. 21

நத்தார் பண்டிகையையொட்டி இம்முறை சிறைச்சாலைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது எனவும் அவர்கள் விடுவிக்கப்படமாட்டார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட பண்டிகைக் காலங்களில் சிறைக் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது குறித்தும் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சு கிடைக்காமையினாலே இம்முறை பொது மன்னிப்பு வழங்கப்பட மாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-10)

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கைக்கு மற்றொரு பதக்கம்

கொழும்பு, டிசெ. 21

பாங்ஹொக்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சனி நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டி ஓட்டப் போட்டியில் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த சிறியானி குலவங்ச வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

நேற்றுக் கிடைத்த வெண்கலப் பதக்கத்துடன் ஸ்ரீலங்கா இந்த விளையாட்டுப் போட்டியில் மொத்தம் 6 பதக்கங்களைப் பெற்றுள்ளது. (இ-5-10)

## இதோ "பட்டர்" விற்பனைக்கு

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்
சுத்தமான புதிய தயாரிப்பு
"யாழ்கோ பட்டர்"
இதோ விற்பனைக்கு 80 கிராம் 25 ரூபா மட்டுமே.
பொது முகாமையாளர்.
(சி/ 5831)

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 | 21 |
| — | — |
| 02 | 12 |
| — | — |
| 1937 | 1987 |

## அமரர் சீ. செல்லத்துரை

(முன்னாள் மேற்பார்வையாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

பதினொராண்டு பறந்திட்டாலும்
பாச நெஞ்சங்கள் துயருடன் நினைத்திடும்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி: **தவமணிதேவி** (கொழும்பு),
பாசமிகு பிள்ளைகள் **த. ஜெகதீஸ்வரி** (இத்தாலி),
**சு. ஜெயந்தி** (ஜேர்மனி).
**ஜெ. ஜெயஸ்ரீ** (ஜேர்மனி)
**ஜெயகாந்தன்** (சுவிஸ்),
**ஜெயரூபன்** (இத்தாலி),
மருமக்கள்: **இ. தர்மரட்ணம்** (இத்தாலி),
**த. சுவேந்திரன்** (ஜேர்மனி),
**இ. ஜெயானந்தராஜா** (ஜேர்மனி),
**தாரணி** (சுவிஸ்),
பேரப்பிள்ளைகள்: **நீலுஷா-நிக்ஷன்** (இத்தாலி),
**டிலூஷன்-றொபின்சன்-டிலக்சன்** (ஜேர்மனி),
**அதீனா** (ஜேர்மனி),
**ஹர்ஷத்வன், காயத்திரி,** (சுவிஸ்),

- குடும்பத்தினர்.

"ஈஸ்வரி வாசம்"
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(61424)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

## இராசம்மா குமாரசாமி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11–02–1918 | 21–11–1998 |

அன்பும், ஆதரவும், ஆறுதலும் தந்து எம்மை ஆளாக்கியதுடன், எமக்குப் பல வழிகளிலும் உதவியாக இருந்த எமது அன்புத்தெய்வம் திருமதி இராசம்மா குமாரசாமி அவர்கள் இயற்கை எய்திய 31 ஆம் நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21 - 12 - 98) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

**கணவன், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மீசாலை வடக்கு,
மீசாலை.
(61413)

# கிளிநொச்சியில் மிதிவெடி

கிளிநொச்சியில் மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் தனது ஒரு காலை இழந்தார்.

தற்பொழுது புளியம்பொக்கணையில் வசிக்கும் சின்னத்துரை கணேசமூர்த்தி (வயது 34) என்பவர் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலுள்ள தனது காணியைப் பார்க்கச் சென்றபோதே அங்கு புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி தனது ஒரு காலை இழந்தார். (இ-5)

# ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு விண்ணப்பம்

99 / 2000 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்களாக இணைவதற்கு இந்த வருடம் ஆசிரிய நியமனங்கள் பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி ஆசிரிய கலாசாலைகளுக்கு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியான அறிவித்தல் நீக்கப்பட்டுள்ளதாகவும்—

ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான புதிய வர்த்தமானி நாளை வெளியிடப்படும் எனவும்-கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

# நோர்வே எம்.பிக்கள் குழு இலங்கை வரும்

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை நேரில் கண்டறியும் பொருட்டு நோர்வே நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளும், நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் பிளாங் போர்க்கும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரின் இல்லத்தில் நடத்திய கலந்துரையாடலின்போதே மேற்குறிப்பிட்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்களின் மனித உரிமைகள் பறிக்கப்படுவதாக நோர்வேயில் வாழும் தமிழர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தெரிவித்துவரும் முறைப்பாடுகளையடுத்தே நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-5-10)

# புலிகள் இயக்க சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு

இதுவரையும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 259 விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களுக்கு எதிராக **விரைவில்** வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் தொடர்பாக விசாரணைகள் முடிவடையாத காரணத்தினாலேயே அவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதில் தாமதம் ஏற்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)


# தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம்

கைதடி

## கேள்விப்பத்திரம் கோரல்
## வெற்றுப் பொருள் விற்பனை

எமது சங்கத்தில் வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பைகள் (இருபத்து நாலாயிரம்) 24,000 விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றன. விரும்புவோர் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா500/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று கேள்விகளை சீல் வைத்த உறையிட்டு 31-12-1998 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு காரியாலயத்தில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். முன்பு வைப்புச் செய்தவர்கள் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

(சி/5835)


# 3-ம் வருட நினைவு நாள்

1998 – 12 – 21



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1911 | 1995 |
| — | — |
| 03 | 12 |
| — | — |
| 06 | 21 |

திருமதி

## அன்னம்மா தூசைப்பிள்ளை

அன்பில் வந்த காவியமாய்
கண்ணில் நிறைந்த ஓவியமாய்
வாழ்ந்த எங்கள் அன்புத்
தெய்வமே! அம்மா
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது!

அன்புடன் நினைவு கூரும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

இல. 4, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(61459)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி பொன்னுத்துரை செல்வலக்ஷ்மி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 – 08 – 1931 | 02 – 01 – 1998 |

திதி: 21 – 12 – 98

தாயே! உம் நினைவலைகள்
என்றும் எம்முள் நிறைந்தவை!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(சி/5822)

# உதயன்

## நற்கீதமாக ஒலிக்கட்டும்

வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில்—சென்னையில்—இருந்து வெளியாகும் ''புரொண்ட் லைன்'' சஞ்சிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசோடு பேசுவதற்குத் தமது அமைப்புத் தயார் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த மாதம் 27ஆம் திகதி பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதற்கான மறுமொழியாக சந்திரிகாவின் இந்தத் தகவலைக் கருதலாம்.

இதனை ஓர் உத்தியோக பூர்வ அறிவிப்பாக ஜனாதிபதி வெளியிடவில்லை என்றாலும், அவரது இந்தத் தகவல் நல்ல சமிக்ஞை ஆகும்; நல்ல சகுனமுமாகும். நாட்டின் பலதரப்பு மக்களும் விரும்பிய, வேண்டிய, வரவேற்கும் மறுமொழியுயாகும்

போரில் ஈடுபட்டுள்ள இரு சாராரும் பேச்சுவார்த்தைக்கு விருப்பம் தெரிவித்துள்ளமை இந்த நாட்டின் அரசியலில் ஒரு புதிய திருப்பு முனையாகும். அழிவை நிறுத்துவதற்கும், பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழலை உண்டாக்குவதற்கும் இந்தத் தகவல் கருவாக அமையக் கூடும்; அவ்வாறே அமையட்டும்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவை இல்லை என்றும், ஆனால் வெளிநாடு ஒன்று பேச்சுக்களை ஒழுங்கு செய்வதில் ஒத்துழைத்தால் அதனைப் புறக்கணிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நிபந்தனைகள் இல்லாமலே பேசுவதற்கும் அரசு தயார் என்பதும் ஜனாதிபதியின் செவ்வியில் தொனிக்கிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சு நடத்துவது கட்டாயமானது என்பது பலராலும் வலியுறுத்தப்பட்ட, உணர்த்தப்பட்ட அடிப்படையாகும். அந்த அடிப்படைக்கு அருகில் இரு சாராரும் வந்திருப்பது மகிழ்ச்சி தரும் ஒன்றாகும். நாற்பத்து நான்கு மாத இடைவெளியின் பின்னர் இரு தரப்பாரது எண்ண அலைவரிசையும் ஒன்றாகியிருக்கிறது. இது குழம்பி விடக்கூடாது.

மேற்படி இந்த அடிப்படையிலிருந்து மிகுதியைச் செவ்வனே கட்டி எழுப்ப வேண்டும். அது இருதரப்புகளினதும் விட்டுக் கொடுக்கும், கொடுத்து வாங்கும் தன்மையிலும், புரிந்துணர்விலும், நேர்மையிலுமே தங்கியுள்ளது. இந்நாட்டு அரசியலில் பண்டிகைகள் மற்றும் தேர்தல்கள் நெருங்கும் போது சமாதானப் பாட்டுக்கேட்பதும் பின்னர் காற்றோடு கரைந்து போவதும் வழக்கம். இம்முறையும் அவ்வாறன்றி இசை இன்பம் நல்கும் நற்கீதமாக தொடர்ந்து ஒலிப்பதாக!

# குடாநாட்டில் அதிகரிக்கும் கொள்ளை; தடுக்கும் பொறுப்பு யாருடையது?

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாக திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. யாழ். பொலீஸ் நிலையத்தில் செய்யப்படும் புகார்களில் அதிகமானவை திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்தனவாகவே இருப்பதை அவதானிக்க முடிகிறது.

வறுமை மற்றும் வேலையின்மை காரணமாக இந்தச் சம்பவங்கள் நடைபெறுவதாகப் பொதுவாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், நன்கு திட்டமிட்டு இயங்கும் சிறு குழுக்களே இத் திருட்டுக்களில் ஈடுபடுகின்றன.

இதுவரை நடைபெற்ற திருட்டுக்கள் ஒவ்வொன்றை

## முன்னெச்சரிக்கையாக நடவுங்கள்

யும் ஆராய்கின்றபோது இரவு 10மணிக்குப் பின்னரே, ஊரடங்கு வேளையிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது தெரியவருகிறது.

வீட்டிலுள்ளவர்கள் நித்திரை கொள்ளும் போது வீட்டு ஜன்னல்கள் ஊடாக அவர்கள் மீது ''குளோரபோம்'' வீசி மயக்கமடையச் செய்துவிட்டு, வீட்டுக்குள்ளிருக்கும் பணம் மற்றும் நகைகள் வெகு சாதுரியமாகத் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

''குளோரபோமி''னால் உண்டாகும் மயக்கத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்கள் தெளிவடைந்து சுயநினைவுக்கு வருவதற்கு ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் செல்லும் இந்த நேரத்தில் திருடர்கள் தமது அலுவலைத் திருப்தியாக முடித்து விடுகிறார்கள். பல இடங்களில் பெண்கள் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்பு போன்ற நகைகள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை தெரிய வந்திருக்கிறது.

அண்மையில் ஒரு வீட்டில் இடம்பெற்ற திருட்டில் தாயின் கழுத்திலிருந்த தாலிக்கொடியும், மகளின் கழுத்திலிருந்த சங்கிலியும் அவர்கள் மயக்கமுற்ற நிலையிலிருந்த போது வெட்டி எடுத்துச் செல்லப்பட்டதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளன. யாழ். கோயில் வீதியில் 70 வயது அப்பாக்குட்டி பரமேஸ்வரி என்ற மூதாட்டி வீட்டிலிருந்த வேளை காலை 9 மணிக்கு வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அவரை கொடுவாக் கத்தியினால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு அவரது காதிலிருந்ததோடுகளைத் திருடிச் சென்றனர். இவர் பின்னர் இறந்து விட்டார்.

இதேபோல, நாச்சிமார் கோயிலடியில் தனிந்திருந்த 68 வயதான திருமதி எஸ். வாலாம்பிகை என்பவர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அவர் அணிந்திருந்த காப்புகளும், தோடுகளும் கழற்றிச் செல்லப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சம்பவங்களையும் நோக்கும் போது, சில ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்காகவும் கொள்ளை நடக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை இம்மாதம் 15ஆம் திகதி நாச்சிமார் கோயிலடியில் இடம்பெற்ற இன்னொரு சம்பவத்தில் 70 வயதான மூதாட்டி ஒருவரை மயக்கமடையச் செய்து விட்டு அவரது காதில், கழுத்தில், கையில் அணிந்திருந்த நகைகளைப் பறித்து எடுத்து அவரைக் கிணற்றுக்குள் தூக்கி வீசி விட்டுப் போய் விட்டனர் திருடர்கள்.

இத்தகைய திருட்டுக்கள், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவற்றைக்கட்டுப்படுத்த முடியாத கையறு நிலையில் திண்டாடி வருகின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றும் பணியில் ஈடுபடும் பொலீஸார்.

### பொலீஸ் வட்டாரங்கள் கருத்து

அதிகரித்து வரும் திருட்டுக்கள் தொடர்பாக ஆராய்ந்து வரும் பொலீஸ் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில் பின்வருமாறு சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் தொடரும் திருட்டுக்களைப் பார்க்கின்ற போது இருவகையான திருட்டுக்கள் நடைபெறுகின்றன என்ற முடிவுக்கு வர வேண்டி உள்ளது, ஒன்று வீட்டிலுள்ளவர்களை மயக்கமடையச் செய்து விட்டு பணம், நகைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. தொலைக் காட்சிப் பெட்டி, டெக், சைக்கிள்களை திருடுவது இரண்டாவது வகை. இத் திருட்டுகள் தொடர்பாக தொடர்ந்து பொலீஸ் நிலையங்களில் குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட சிறு குழுவினரே இத்திருட்டுக்களில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிய முடிகிறது — என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் —

பகல் நேரங்களில் போத்தல், அலுமினிய, பித்தளைப் பாத்திரங்கள் வாங்குவதாகக் கூறிக் கொண்டு வீடுகளுக்குள் செல்பவர்கள் குறிப்பிட்ட வீட்டை நோட்டமிட்ட பின்னர் இரவு நேரத்தில் வந்து தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். இவர்களுக்கு திருட்டுக்கள் நடைபெறும் பகுதிகளிலும் சில உதவியாளர்கள் இருப்பதாக நம்புகின்றோம்.

சைக்கிள் திருட்டுக்களைப் பொறுத்த வரை அநேகமாக பூட்டாமல் விடப்படும் சைக்கிள்களே திருடப்படுகின்றன படையினர் மற்றும் பொலீஸாரின் ரோந்து மற்றும் பாதுகாப்பு அரண்கள் இல்லாத பகுதிகளிலே இத்தகைய திருட்டுக்கள் அதிகளவில் இடம் பெறுவதால், அயலிலுள்ளவர்களின் ஒத்துழைப்புடன் இத் திருட்டுகள் இடம் பெறுகின்றன என்று ஊகிக்க வேண்டி உள்ளது.

கொள்ளையர் பற்றிய சரியான தகவல்களை வழங்க பொதுமக்கள் பின்னிற்பதாலும், இச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் சாட்சியமளிக்க முன் வராமையினாலும் திருட்டுக்களைத் தடுக்க முடியாத நிலை உண்டு—என்றார்.

### மக்கள் கருத்து

ஆனால் பொதுமக்கள் பலரிடம் திருட்டுக்கள் குறித்துக் கருத்துக்கேட்ட போது—

இரவு வேளைகளில்—ஊரடங்கு நேரத்தில்—திருட்டுக்கள். கொள்ளைகள் நடைபெறுவதால் இவற்றுக்குப் பாதுகாப்பு அரண்களில் பணிபுரியும் படையினரும் ஒத்தாசை வழங்குகிறார்கள் அல்லது கண்டும் காணதவர்களாக வாளாவிருக்கிறார்கள் என்றே அனு

**கேசரி**

மானிக்க வேண்டியுள்ளது—

பொலீஸார் தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து வெளியில் சென்று விசாரணைகளை உரிய முறையில் நடத்தினால் திருட்டுக் கோஷ்டிகளை மடக்கி விடலாம், என்று தெரிவித்தனர்.

கொள்ளைகளும் திருட்டுக்களும் அதிக எண்ணிக்கையில் நடந்து விட்டபோதிலும், அவற்றில் ஈடுபட்டவர்களில் ஒருவரையாவது இன்னும் கண்டுபிடிக்க முடியாதிருப்பது. இனங்காணாதிருப்பது சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் உள்ள பலவீனத்தையே சாட்டுகிறது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஊரடங்கு அமுலில் இல்லாவிடில் அயலவர்களே சேர்ந்து திருடர்களைப் பிடித்து விடுவார்கள். இப்போது இரவில் கூக்குரல் சத்தம் கேட்டாலும் அயல் வீட்டுக்குச் செல்ல முடியாத நிலை உண்டு. இதுவும் திருடர்கள், கொள்ளையர்களுக்குச் சாதகமான நிலையே—என்றும் பொது மக்கள் சொல்கின்றனர்.

எப்படியோ —

பல நாள் திருடன் என்றோ ஒரு நாள் சட்டத்தின் பிடியில் சிக்குவான் என்பதைத் திருட்டுக்களில் ஈடுபடுபவர்கள் உணர வேண்டும். சந்தர்ப்ப சூழ் நிலைகளால் இத்தகைய நிலைக்குத்தள்ளப்பட்டோர் இனியாவது திருந்துவதற்கு முன்வரவேண்டும். திருட்டுக்கள் நடைபெறாதுதடுக்கவும், தவிர்க்கவும் பொதுமக்களும் முன்னெச்சரிக்கையுடனும், மிக விழிப்புடனும் நடந்து கொள்வது பிரதானம்.

நகைகள், பணம் போன்றவற்றை வங்கிகளிலோ அல்லது பாதுகாப்பான இடங்களிலோ வைப்பதுடன் இனந்தெரியாதவர்களை, முந்திய அறிமுகம் இல்லாதவர்களை வீட்டுக்குள் அழைத்துச் செல்லாமல் கேற்றடியிலேயே வைத்து அனுப்பி விட வேண்டும். மேலும் பகலிலே வீட்டுக்கருகில் இனந்தெரியாதவர்களின் நடமாட்டம் இருந்தால் மிக எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

தமது இடங்களில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் சரியான தகவல்களைப் பொலீஸாருக்குத் தெரிவிப்பதுடன் சந்தேக நபர்களையும் இனம் காட்டுவதன் மூலம் தொடரும் கொள்ளைகளைத் தடுக்க உதவலாம்.

சைக்கிள்களைப் பூட்டிபாதுகாப்பான இடங்களில் வைப்பதன் மூலம் அவை திருட்டுப் போவதனைத் தடுக்க முடியும்.

பொதுவாக கொள்ளைகளுக்கும, திருட்டுகளுக்குமான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பவர்களாக நாம் இருக்கக் கூடாது என்பதனை மக்கள் நன்றாக உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லையேல் வினையை விலைக்கு வாங்குவது தவிர்க்க முடியாததாகி விடும். ஆகையால் மக்கள் தரப்பில் முன்னெச்சரிக்கை அவசியம். ★

## செய்தி மடல்

## நாளை

மார்கழி 07

செவ்வாய்க்கிழமை

திதி: திருதியை, காலை 6.45 வரை.

சதுர்த்தி காலை 6.18 வரை.

நட்சத்திரம்: திருவோணம் பின்இரவு 3.19 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 10.55-12.25

ராகுகாலம்: 3.25-4.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தூசியைக் கண்டதும் இமைகள் மூடுவதுபோல் தீமையைக் கண்டதும் விலகிவிட வேண்டும்.

- புலவர் கீரன்

## மருதங்கேணியில் பழமரக் கன்று வழங்கல்

செம்பியன்பற்று, டிசெ. 21

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள நூறு பயனாளிகளுக்கு 5 கமக்கார அமைப்புக்கள் ஊடாக பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குடத்தனை கமக்கார அமைப்பின் ஊடாக 20 பேருக்கும்—

அம்பன் கமக்கார அமைப்பின் ஊடாக 20 பேருக்கும்—

வத்திராயன் கமக்கார அமைப்பின் ஊடாக 10 பேருக்கும்—

நாகர்கோயில் கமக்கார அமைப்பின் ஊடாக 20 பேருக்கும் —

மருதங்கேணி கமக்கார அமைப்பின் ஊடாக 10 பேருக்கும்—

செம்பியன்பற்று கமக்கார அமைப்பின் ஊடாக 20 பேருக்கும் —

பழமரக்கன்றுகள் வழங்கப் பட உள்ளன. (ஐ-36)

## நூலகத்துக்கு சஞ்சிகைகள்

பருத்தித்துறை பொது நூலகத்துக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்துத் தமிழ், ஆங்கில தினசரிகள். வார, மாத சஞ்சிகைகள் என்பனவற்றை பருத்தித்துறை நகரசபை வழங்கவுள்ளது.

வாசகர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை எடுத்துள்ளதுடன் இவற்றுக்கான நிதியையும் அதிகரித்துள்ளது. (ஐ-173)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கருணாநிதி வளர்மதி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் இராணுவ அனுமதித் துண்டும் 18.12.98 அன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மதனா ஜுவலரி 177/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (61463)

கந்தரோடையைச் சேர்ந்த பூபாலசிங்கம் கெவுத்துவமணி ஆகிய எனது 318390622 V இலக்க தேசிய, விசேட அடையாள அட்டைகள் நுணாவில்—கைதடிச் சந்திக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எஸ். சுப்பிரமணியம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி./லக்சன் வீடியோ, 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்./ வர்த்தகத் திணைக்களம், சுன்னாகத்தில் ஒப்படைக்கவும். (61451)

வேலணை மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசேஸ்வரி என்பவருடைய தேசிய, விஷேட அடையாள அட்டைகள், பேஸ் உடன் துரையப்பா ஸ்ரேடியத்திற்கும், மடத்தடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து லலிதாஸ் அழகுமாடம், 24 (21), மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும். (61477)

### திருமண சேவை

எங்களிடம் அரச தொழில் புரியும் ஆண், பெண்களின் சாதகங்கள் உள்ளன. தொடர்பு: வே. புண்ணியமூர்த்தி, எம்.ஜி.ஆர். அகம், (சியாமளா மில் அண்மையில்) கண்டி வீதி, புத்தூர்ச் சந்தி, மீசாலை. (61464)

### ஆங்கிலம், கணிதம்

ஆரம்பத்திலிருந்து ஆண்டு 6 — O/L Distinction Credit பெறுபேறடைய (Spoken-English) கற்பிக்கப்படும். வாரம் 5 மணித்தியாலங்கள். ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (61376)

# வாகன விபத்துச் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் டிசெ, 21

யாழ்ப்பாணத்தில் பலபகுதிகளிலும் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பலர் காயமடைந்துள்ளனர், காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக் கிழமை உடுப்பிட்டியில் இடம்பெற்ற ஒட்டோ விபத்தில் அதே இடத்தைச்சேர்ந்த சுப்பிரமணியம்அருந்தவம்(வயது25) என்பவர் காயமடைந்தார்.

அச்சுவேலியில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து உடுப்பிட்டியைச் சேர்ந்த வேலாயுதம் இரத்தினவேல் (வயது 18) என்பவர் காயம் அடைந்தார்,

திருநெல்வேலிச் சந்தியில் சனி காலை இராணுவத்தினரின் சைக்கிளும் பொதுமகன் ஒருவரின் சைக்கிளும் மோதிக் கொண்டதில்பொதுமகன் காயமடைந்தார்.

பருத்தித்துறை— யாழ்ப்பாணம் வீதி, அச்சுவேலிப்பகுதியில் சனி காலை வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை பஸ்ஸும் மினிபஸ் ஒன்றும் மோதிக் கொண்டதில் ஒருவர் மட்டும் காயமடைந்தார். ஏனையோர் தெய்வாதீனமாக காயமெதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

பொலிகண்டியில் சனி மாலை பொலீஸாரின் ஜீப் மோதியதில்இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்,

அன்ரன் யோகராஜா (வயது 26) என்பவரே இந்த விபத்தில் காயமடைந்தவாவார். காயமடைந்தவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ், போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-5-15-86-109-173)

## மிதிவெடியில் மாடு சிக்கியது

இளவாலை, டிசெ. 21

இளவாலைப் பகுதியில் அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் என்பவரது பசுமாடு மிதிவெடியில் சிக்கி முன்னங்காலை இழந்தது.

இப்பகுதியில் விறகு வெட்டச் செல்வோர், கால்நடைகள் மிதிவெடியில் சிக்குவது வழமையாகிக் கொண்டு வருகிறது. (ஐ-48)

## பட்டதாரி நியமனங்களுக்கு விரைவில் விண்ணப்பம்

கொழும்பு, டிசெ. 21

அரச திணைக்களங்களில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் பொது நிர்வாக அமைச்சினால் கோரப்படுமென கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நியமனங்களுக்கான வர்த்தமானி தயாரிப்பு வேலைகள் முடிவடைந்துள்ளதாகவும்—

அவை ஓரிரு தினங்களில் வெளியிடப்படுமெனவும்—

இதற்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 31 ஆம் திகதி என்றும்—

மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-8)

## எம்.ஜி.ஆர். நினைவு நாள் வைபவம் குருநகரில்

யாழ்ப்பாணம், டிசெ. 21

தமிழக முன்னாள் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் 11 ஆவது நினைவு தினத்தையொட்டி இம்மாதம் 24 ஆம் திகதி யாழ். குருநகர் பகுதியிலுள்ள எம்.ஜி ஆரின் சிலைக்கும், அண்ணா சிலைக்கும் மாலை அணிவிக்கப்படவுள்ளது.

மாலை அணிவித்தலைத் தொடர்ந்து குருநகரில் நினைவுப் பேருரைகளும் இடம்பெறவுள்ளன.

அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் புரட்சித் தலைவரின் அழியாத, நீடித்த புகழுக்குக் காரணம்சினிமாவா?கொடையா? அரசியலா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

இம் மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் எம். ஜி ஆர். நினைவு தினத்தையொட்டி விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (இ-5)

## வல்லையில் வடலிகள் தறிப்பு

பருத்தித்துறை, டிசெ. 21

வல்லைப் பகுதியில் வளர்ந்து வரும் வடலிப் பனைகள் தறிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் மர நடுகைத் திட்டத்தின் கீழ் வல்லைப் பகுதியில் மரங்களை வளர்க்கும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களால் நடப்பட்ட பனை மரங்கள் வளர்ந்து வரும் வேளையில் வெட்டி வீழ்த்தப்படுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஐ-118-173)

## நெடியகாடு பகுதியில் உள்ள வெள்ள வாய்க்காலின் ஒருபகுதி புனரமைப்பு

வல்வெட்டித்துறை, நெடியகாடு வெள்ளவாய்க்காலின் எஞ்சியுள்ள புனரமைப்புப் பணிகள், அடுத்தாண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொடரப்படும் என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு இதற்கென ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வாய்க்காலின் பூரண புனரமைப்புப் பணிகளுக்குப் போதாது இருந்ததாகவும், இத்தொகையில் வாய்க்காலின் துப்புரவுப் பணிகளுடன் ஒருபக்கச் சுவரின் பெரும்பகுதி கட்டப்பட்டுள்ளதாகவும், மிகுதி அடுத்தாண்டு செய்து முடிக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இருந்து வரும் மழை வெள்ளம் முழுவதும் இந்த வாய்க்காலின் ஊடாகவே கடலுக்குச் சென்றடைகின்றது.

இந்த பெரிய வெள்ள வாய்க்கால் கடந்த பல வருடங்களாகத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாது பக்கச் சுவர்கள் இடிந்து தூர்ந்த நிலையில் கிடந்தது. (ஐ-15)

## காய்ச்சலால் சிறுமி மரணம்

தென்மராட்சி, டிசெ. 21

நிமோனியா காய்ச்சலால் (சளிச்சுரம்) பாதிக்கப்பட்ட நான்கு வயதுச் சிறுமி உயிரிழந்தார்.

கொடிகாமம் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த லோகேஸ்வரன் பிரேமினி (வயது 4) என்னும் சிறுமியே மரணமானவராவார்.

அண்மையில் பெய்த மழையில் நனைந்ததால் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த சிறுமி கடந்த வியாழனன்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## புனரமைப்பு

நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் ஜனவரிமாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது.

சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவம் இடம்பெறும் எனவும் தேவஸ்தான புனரமைப்புப்பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் அறங்காவலர் சபைத்தலைவர் நா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

(ஐ-111)

## மானிப்பாய் தபாலகம்: தொலைபேசி இணைப்பு

மானிப்பாய் தபால் அலுவலகம், பிடாரி கோயிலடி உப தபால் அலுவலகம் என்பவற்றிற்கு நேற்று முன்தினம் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை ஆனைக்கோட்டை கூழாவடி உபதபால் அலுவலகத்திற்கும் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை பொதுமக்களின் நலனுக்காக ஆனைக்கோட்டை கூழாவடியிலும் மானிப்பாய் தபால் அலுவலகத்திலும் நாணயக்குற்றி தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன

மேற்படி இணைப்புகளை உத்தியோக பூர்வமாக வடமாகாண பதில் பிரதி தபால் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் ஆரம்பித்து வைத்தார்.

'ரெலிகொம்' நிறுவனத்தின் வலயம் 3 இன் முகாமையாளர் எஸ். கனகசூரியர், யாழ் பிரதேச முகாமையாளர் ரி. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஐ-ரீ)


இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்

CEDRIC

மண்ணெண்ணெய் கேஸ் குகர்

• சிலிண்டர் தேவையில்லை
• கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
• மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அமுத்தம் தேவையில்லை.

3500/= மட்டுமே

தொலைபேசி இல. 323223

98, Braybrook Place, Colombo 02.

தலைமை அலுவலகம்

172, Kensington Church Street, Kensington, London. W8 BN

Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034



ஏஜண்டுகள் தேவை

(/சி5786)


சிந்தை சிலிர்க்கும்

## முதலாம் ஆண்டு நினைவுப் பூக்கள்

தோற்றம்
02 — 02 — 1942



மறைவு
01 — 01 — 1998

திருமதி

### வேதா சிவதாசன் B. A.

(முன்னாள் குடும்ப ஆலோசகர் – யாழ். மாவட்ட நீதிமன்றங்கள்)

முன்னாள் சாவகச்சேரி பிரபல சட்டத்தரணி, பதில் நீதிவான் வே. கனகசபை அவர்களின் அன்பு மகள்

திதி: 21 - 12 - 1998

பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்களை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி எய்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன், தாய், தம்பி, தங்கைகள், மைத்துனர்கள், மைத்துனியர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

'பிருந்தாவனம்'
கொடிகாமம்.
76, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (61476)

# அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் அழுத்தம்கொடுக்கபுளொட்கோரிக்கை

## ஜனாதிபதிக்கு மகஜர்

வவுனியா, டிசெ. 21

பதினைந்துலட்சம்இலங்கை முஸ்லிம் மக்களின் மனக் கொந்தளிப்புடன் சங்கம மாகி இருக்கும் சிங்கள தமிழ் மக்களின் ஈராக் மீதுள்ள தார்மீக ஆதரவினையும்—

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிரான எதிர்ப் புணர்வுகளையும்—

எமது நாட்டின் ஜனாதிபதி யான தாங்கள் அந்த நாடு களுக்கு வெளிப்படுத்தி தாக் குதலை முடிவுக்குக் கொண்டு வருமாறு மனிதாபிமானத் தின் பெயரால் அழுத்தங் களைக் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி யுள்ள மகஜரில் மேற்கண்ட வாறு புளொட் அமைப்பு கேட்டுள்ளது.

புளொட் அமைப்பின் ஏற் பாட்டில் வவுனியாவில் சனி யன்று நடந்த ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து புளொட் உப தலைவர் நா. மாணிக்க தாசனின் கையொப்பம் கொண்ட மகஜரை புளொட் அமைப்பின் பொறுப்பாளர் கரிபாபு வவுனியா அரச அதி பரிடம் கையளித்தார்.

ஜனாதிபதிக்கு முகவரியி டப்பட்ட அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

பாசிச ஏகாதிபத்தியத்தின் ஒட்டுமொத்த வடிவமாக அமெரிக்க வல்லரசு தனது சர்வாதிகார எதேச்சாதிகார பாதங்களை ஊன்றிப் பதித்து அந்நாட்டின் வளங்களை, நலன்களை உறிஞ்சி வருவதை முழு உலகமும் அறியும்.

கடந்த காலங்களில் உலக ளாவிய ரீதியில் தமது உரி மைக்காப் போராடி வந்த நாடுகள் மீதும் இயக்கங்கள் மீதும் குறிப்பாகச் சுரண்டக் கூடிய நாடுகள் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதும் வாழ வழி இல்லாமல் ஆக்குவ தும், சுரண்டி குட்டிச்சுவராக் குவதும் அமெரிக்காவின் தொடரும் செயல்களாகும்.

வெளிநாடுகளில் அமெரிக் காவின் தலையீடுகள், ஆக்கிர மிப்புக்கள் இருக்கக் கூடாது என்பதையே தனது பிரதான நோக்கமாகவும், பிரசாரமாக வும் முன்வைத்து அதிகாரத் துக்குவந்த ஜனாதிபதி கிளின் ரன் தனது ஆட்சிக்குத் தனிப் பட்ட ரீதியாக ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை மூடி மறைத்து தனது செல்வாக்கை மீளப் பெறும் நடவடிக்கையாகவே ஈராக் மீதுமிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண் டார்.

இந்தத் தாக்குதலைத் தவிர்த்துத் தனது அபகீர்த் திக்குக் காரணமானவர் மீது தாக்குதல் தொடுப்பதே பொருத்தமானது. அனைத்து நாட்டுப் பிரச்சினைகளுக்கும் மூன்றாவது தரப்பு மத்தியஸ் தம் என்ற போர்வையில் விழுந்தடித்து பிரசன்னம் கொடுக்கும் ஏகாதிபத்திய அமெரிக்க, பிரிட்டிஷ் அரசு கள் ஐக்கிய நாடுகள் சபை யின் தீர்மானம் இன்றியும் அதற்குக் கட்டுப்படாமலும் செயற்பட்டுவருவதால் அமெ ரிக்காவை எந்த நாடும் மூன் றாம் தரப்பு மத்தியஸ்தராக இனிமேல் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

பிரித்தானிய, அராஜக ஏகாதிபத்தியங்களினது தனிப்பட்ட முடிவை நாம் அனைத்து அமெரிக்க, பிரித் தானிய மக்களின் முடிவாகக் கருதமுடியாது.

இவர்களின் தனிப்பட்ட முடிவுகளுக்கு எதிராக அந் நாட்டு மக்களும் ஈராக்குக்கு ஆதரவான போராட்டங் களை நடத்தி தமது மனி தாபிமானத்தையும் மனித நேயத்தையும் காட்டவேண் டும்.

புனிதமான நோன்பினை அனுஷ்டிக்கும் றம்ழான் காலத்தில் அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்டுள்ள நட வடிக்கை உலகெங்கும் வாழும் கோடானு கோடி முஸ்லிம் மக்களின் உணர்வுகளை கேவ லப்படுத்தி அவமதிக்கும் செய லாகும்.

இந்தப் பிரச்சினை முஸ்லிம் மக்களின் சன்மானப் பிரச்சி னையாகவோ அன்றி உயிர்ப் பிரச்சினையாகவோ மட்டுமல்ல உயிரோடும் உணர்வோடும் ஒன்றாகக் கலந்த முழுமையான பிரச்சி னையாகவே நாம் உணர்கின் றோம்.

15 இலட்சம் இலங்கை முஸ்லிம் மக்களின் மனக் கொந்தளிப்புடன் சங்கம மாகியிருக்கும் சிங்கள— தமிழ் மக்களின் ஈராக் மீதுள்ள தார்மீக ஆதரவினையும்—

அமெரிக்கா, பிரிட்டனுக் கெதிரான எதிர்ப்புணர்வு களையும்—

எமது நாட்டின் ஜனாதிபதி யான தாங்கள் யுத்தத்திலீடு பட்டுக்கொண்டிருக்கும் நாடு களுக்கு வெளிப்படுத்தி மனி தாபிமானத்தின் பெயரால் அழுத்தங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(இ-3)

## ஒளிவிழா

வலிகாமம்.தெற்கு டிசெ.21

மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக்கல்லூரி விவ சாய நிறுவனத்தினரால் எதிர்வரும் வியாழக்கிழமை ஒளிவிழா கொண்டாடப்பட வுள்ளது. அதிபர் த. குக தாசன் தலைமையில் விழா இடம்பெறும்.

(ஐ-152)

# சுன்னாகம் சந்தை புதுப் பொலிவு பெறும்

வலிகாமம் தெற்கு. டிசெ. 21

சுன்னாகம் மத்திய சந் தையை நவீன மயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன,

ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்டத்தின் உதவி யுடன் 2 இலட்சம் ரூபா செலவில் சந்தைப் பகுதி நவீன மயப்படுத்தப்பட உள் ளது.

வியாபாரிகளுக்கும், விவ சாயிகளுக்கும், பொது மக்க ளுக்கும் சகலவிதமான வசதி களையும் அளிக்கக்கூடியதாக சுன்னாகம் சந்தை நவீன மயப்படுத்தப்படும் என வலி காமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா, செல்வ ராசா தெரிவித்துள்ளார்.

சந்தைப் பகுதியில் உள்ள எல்லாக் கடைகளுக்கும் நீர் விநியோகிக்கக்கூடிய முறை யில் குழாய் நீர் அமைப்பு செய்து கொடுக்கப்பட உள்ள தாகவும் அவர் தெரிவித்தார்,

அத்துடன் சுன்னாகம் கழிவு நீர் வாய்க்காலும் புன ரமைப்புச் செய்யப்பட உள் ளது.

(ஐ-152)

## கோல உடை அணியப் பணிப்பு

வடமராட்சி, டிசெ. 21

பருத்தித்துறை நகரசபை யில் கோலவுடை அணிந்து கடமையாற்ற வேண்டிய ஊழியர்கள் அவற்றை அணிந்தே கடமையாற்ற வேண்டும் என பருத்தித் துறை நகரசபைத் தலைவர் வி. விஜயரட்ணம் பணித் துள்ளார்.

கோல உடை அணிய வேண் டிய ஊழியர்களுக்கு பருத் தித்துறை நகரசபையால் கோல உடைகள் வழங்கப் பட்டுள்ளன. (ஐ-173)

## மருதங்கேணிக்கு அன்னாசி உறிஞ்சிகள்

செம்பியன்பற்று, டிசெ.21

வடமராட்சி கிழக்கு மரு தங்கேணி உதவி அரசஅதிபர் பிரிவில் உள்ள 300 பயனாளி களுக்கு வெற்றிலைத்துண்ட மும், அன்னாசி உறிஞ்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதியில் இச் செய்கை வெற்றி அளிக்கும் பட்சத்தில் மேலும் பலருக்கு இத்துண் டங்கள் வழங்கப்படவுள்ள தாகத்தெரிவிக்கப்பட்டது.

(இ-36)

# பரிசளிப்பு விழாவும் கலைஞர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ. 21

பாரம்பரிய கலைகள் மேம் பாட்டுக்கழகம் ஒழுங்குசெய் துள்ள இருநாள் பரிசளிப்பு விழாவும், கலைஞர் கௌர விப்பு விழாவும் எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள முதல்நாள் விழாவில் பிரதம விருந்தினர் களாக யாழ். மாவட்ட அர சாங்க அதிபர் க. சண்முக நாதனும், சிறப்பு விருந்தின ராக யாழ். இந்துமகளிர் கல்லூரியின் பதில் அதிபர் செல்வி யோ. கந்தையாவும் கலந்துகொள்வர்

முற்பகல் 9. 30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில சிறப்புமலர் வெளியீடு, கலாநிதி சு. குணராசாவின் மதிப்பீட்டுரை, இசைநாடகக் கூத்துப் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கான பணப் பரிசு வழங்கல், மூத்த கலை ஞர்களை மகுடம் சூட்டிக் கௌரவித்தல், கூத்து மேடைப் பாடல்கள், மேளக் கச்சேரி ("பறை"), விருந் தினர்கள் உரை என்பன இடம்பெறும்.

அன்று பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளில் வட்டுக் கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழுவின் 'ஆரணி யத்தில அடலசெறி வடனும் விஜயனும்' ஆட்ட நாடடுக் கூத்து, கைதடி வளர்மதி நாடக மன்றத்தின் காத்தவ ராயன் கூத்து என்பன இடம் பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் நாள் விழாவில் யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந் தரம்பிள்ளை, பிரதம விருந் தினராகவும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாச லம்பிள்ளை சிறப்பு விருந்தின ராகவும் கலந்து கொள்வர்.

காலை நிகழ்வுகளில் குற வன் குறத்தி நடனம், பாராட்டுப் பத்திரங்கள் வழங்கல், பொய்க்கால் குதிரையாட்டம், நாட்டார் பாடல், மேளக்கச்சேரி, கர காட்டம், விருந்தினர்கள் உரை, அரிச்சந்திர மயான காண்டம் என்பன இடம் பெறும்.

மாலை நிகழ்வுகளாக பாஷையூர் வளர்மதி நாடக மன்றத்தின் 'முத்தா? மாணிக்கமா?' நாட்டுக் கூத்து, சத்தியவான் சாவித் திரி இசை நாடகம் என்பன இடம்பெறும். (ஐ-8)

## சமய நிகழ்ச்சிகள்

நெடுந்தீவு, டிசெ. 21

நெடுந்தீவு கிழக்கு ஆல மாவனப்பிள்ளையார்கோயில் நெடுந்தீவு மத்தி பெருக் குடி ஸ்ரீசித்திவிநாயகர் ஆல யம், மேற்குநெழுவினி சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற் றில் திருவெம்பாவை உற் சவம்எதிர்வரும்வியாழனன்று ஆரம்பமாகிப் பத்துத் தினங் கள் நடைபெறும். (ஐ-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.21

பொலிகண்டி அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி வைகுண்ட ஏகாதசி மஹோற் சவம் இன்று காலை 10.45 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இந்த உற்ச வங்களில் எதிர்வரும் 29 ஆம் திகதி இரதோற்சவமும், 30 ஆம் திகதி தீர்த்தோற்ச வமும் இடம்பெறும்.

பகல் திருவிழாக்கள் காலை 9 மணிக்கும், இரவுத் திரு விழாக்கள் பிற்பகல் 3மணிக் கும் ஆரம்பமாகி நடை பெறும், (ஐ-15)


# விக்னா கல்வி நிறுவனம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L EVENING CLASS - 3. 15 - 5. 30
SAT., SUNDAY CLASS - 8.00 - 2 00

ஆண்டு 6, 7, 8, 9, 10 - 3. 15 - 5. 30

★ அனைத்து வகுப்புகளும் விடுமுறை நாள்களில் காலை 8. 00 முதல் 12. 00 வரை நடைபெறும்.
★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
★ தூர இடத்து மாணவர் நலன்கருதி சனி, ஞாயிறு வகுப்புக்கள்,

(61481)



# தவறிவிட்டது

கடந்த 19 ஆம் திகதி மாலை காங்கேசன்துறை யில் வைத்து 'பிள்ளையார்' என்று பெயரிடப்பட்ட லொறியில் ஏற்றப்பட்ட பெரிய பிரயாணப்பை யாழ். பஸ் நிலையத்தில் இறக்கும்போது தவறிவிட்டது. அதனுள் ரூபா 50,000 பெறுமதியான உடுபுடைவை களும், திருமதி ரி. பழனிப்பிள்ளை என்பவரது மூன்று மாத கால ஓய்வூதிய வவுச்சர்களும், கடிதங்களும் அடங்கியிருந்தன. அதனை மாறி எடுத்தவர்கள் தயவு கூர்ந்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

திருமதி வ. சண்முகலிங்கம்,
ஸ்ரீமுருகன் களஞ்சியம்,
கொடிகாமம்.

அம்பிகை களஞ்சியம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(61486)



SALES SALES SALES

# பண்டிகைக்கால சிறப்புத் தள்ளுபடிகள்

பண்டிகைக்கால தினுசுகளைத் தேர்ந்தெடுக்க யாழ். நகரில்
**சிவகணேசன் புடைவையகம்** தேடி வாரீர்!
பெரிய கடை விதியிலே பிரியமுள்ள புடைவையகம்
பெறுமதியான துணிவகைகள் மலிந்த கூடம்
அரிய திறம் சாறிகளும் ஆடவர், நங்கையர் உடைவகையும்
அற்புதம் பொங்கும் ஜவுளிகள் உறையுமிடம்
பிரியமுடன் வருக! யாவும் பெறலாம் மலிவாய்.

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரிய கடை, (61488) யாழ்ப்பாணம்.

## தென் ஆபிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)
லைப் புலிகளுடன் பேச்சு நடத்த அவர்கள் முயற்சி எடுத்தனர்.

பாதுகாப்புக் காரணங்கள் முன்வைக்கப்பட்டதால் அந்த முயற்சி கைகூடவில்லை.

தென் ஆபிரிக்கா திரும்பிய குழுவினர் அங்குள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்பினருடன் கலந்துரையாடினர்.

அந்த அமைப்பின் தலைவர் சி. சின்னப்பன் " விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்தித்துப் பேச வேண்டும் " என்று கேட்டுக்கொண்டார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இந்த விடயத்தில் தலையிட வேண்டும் என்றும் கோரினார்.

இலங்கை விவகாரத்தில் விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசி, அவர்களின் கருத்தை அறியும் வரை எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்றும் —

விடுதலைப் புலிகள் தலைவர்களைச் சந்திக்க எந்தவொரு நாட்டுக்கும் செல்லத் தயாராக இருப்பதாகவும் — அக்குழுவில் அங்கம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ராஜு தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமீபத்தில் தென் ஆபிரிக்கா சென்று விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்தும்படி கோரிக்கை விடுத்ததை அடுத்தே உண்மை நிலையை நேரில் காண தென் ஆபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் குழு இலங்கை வந்தது. (இ-3-21)

## அடுத்த வரு...

(முதலாம் பக்கத் தொடர்)
தவிர வேறெதனையும் காண முடியவில்லை.

இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு யார் முன்வந்தாலும் அவர்கள் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும். அவர்களுடன் பேசாமல் எடுக்கப்படக்கூடிய எந்தத் தீர்வு முயற்சியும் சாத்தியமற்றதாகவே முடியும்.

இந்த யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து போயுள்ளதோடு, நாட்டு மக்கள் பெரும் கஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது. கிராமப்புறத்து மக்கள் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர் மக்கள் எதிர்ப்பை வேறு திசைக்குத் திருப்புவதற்கு அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அடுத்த வருட இறுதிக்குள் ஐக்கியதேசியக்கட்சி மீண்டும் பதவிக்கு வரும். ஆனால் ஒன்றுமட்டுமே உறுதி. எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து நாம் அரசை அமைக்கப்போவதில்லை, நிச்சயமாக தனித்தே அதிகாரத்துக்கு வருவோம்—இப்படி அவர் கூறினார். (இ-3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)
அமைச்சு அறிவித்தது.

இம்மோதல் சம்பவத்தில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் எனவும் —

விடுதலைப் புலிகள் தரப்பிலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# சொத்தி உபாலியைக் கொலை செய்த நபர்கள் எந்நேரமும் சிக்கலாம்

கொழும்பு, டிசெ. 21

சொத்தி உபாலியைக் கொலை செய்தவர்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாமென மூத்த பொலீஸ் அத்தியட்சகர் பத்மசிறி லியனகே தெரிவித்துள்ளார்.

கல்கிசை பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான இந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், சொத்தி உபாலியைக் கொலை செய்தவர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் படுகொலை உட்பட பல்வேறு பாதாள உலக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சொத்தி உபாலி சுமார் இரண்டு வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளையில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-5-10)

# வடமராட்சி வடக்கில் மீன்பிடி நேரம் மாற்றம்

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் மீன் பிடிக்கும் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் தினமும் அதிகாலை ஒரு மணி தொடக்கம் 5-30 மணிவரை மட்டுமே மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் தினமும் அதிகாலை 2 மணி தொடக்கம் 6 மணிவரை மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டது.

புதிய நடைமுறையில் மீன் பிடிப்பதால் மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாலை 5மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே மீன்களை பிடிக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளதெனவும் மீனவ கூட்டுறவுச்சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## வயல் நீரில் மூழ்கி மரணம்

தென்மராட்சி, டிசெ.21

நெல்வயலில் களை பிடுங்கிக் கொண்டிருந்தவருக்குத் திடீரென வலிப்பு நோய் வந்ததால் வயல் நீருக்குள் மூழ்கி மரணமானார். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வரணி வடக்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை கிருஷ்ணராசா (வயது 38) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கினார். (ஐ - 117)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத்தொடர்)
வடிக்கைகளை எடுத்து வருகின்றது.

யுத்தத்துக்கு பெரும்பணம் செலவாகும் இந்த வேளையிலும் எமது அரசாங்கம் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட சமூர்த்தி முகவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளது.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-7)

## கொலை...

(முதலாம் பக்கத் தொடர்)
துறையினர் கைது செய்தனர்.

தகுந்த சாட்சிகளுடன் இந்தக் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து நேற்று மாலை முள்ளியவளையில் வைத்து அவருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
வெல்டிங் குச்சிகள் ஆகியவையும் கப்பலில் இருந்து புலிகளின் படகுகளில் இறக்கிக் கொண்டு செல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)


**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர்
98 டிசெம்பர் G. C. E. O/L ENGLISH
வினாப்பத்திரம் தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
சயன்ஸ் அக்கடமி, ரூபா அக்கடமி
ஆண்டு 4 முதல் O/L வரை
புதிய அனுமதி'கு முந்துவீர்.
சமூகக்கல்வி
உங்கள் ஆசிரியர் S. R. பாலா
(61475)

**MODERN LONDON STAR**
Station Lane, Chavakachcheri.
COMPUTER TRAINING DIVISION
- Diploma in Software Engineering
- Diploma in MS Office' 97

Certificate courses:
- MS Word / Word Star
- MS Excel / Lotus
- MS Power Point
- d Base III +

SECONDARY TRAINING DIVISION
- ஆண்டு 9, 10, 11 வகுப்புக்களுக்கான அனைத்து பாடநெறிகளும் 28—12—98 இல் ஆரம்பமாகின்றன.
- தென்மராட்சியின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த எதிர்பார்க்க முடியாத பயிற்சி நெறிகள்.
- பரீட்சைகளும் புள்ளி வழங்கல்களும் தகுதி நிலைச் சான்றிதழ்களும் முற்றிலும் கணனியில் ஒழுங்கமைக்கப்படுகிறது.
- கணனி பற்றிய அறிமுகம் 3 வகுப்புக்கும் கட்டணம் இலவசம்.
- வகுப்பொன்றுக்கு 25 மாணவர்களுக்கு அனுமதி விஞ்ஞான பரிசோதனைகள் Video வடிவில்.
- அடுத்த விளம்பரத்தில் எமது ஆசிரியர் குழு அறிவிக்கப்படும்.

- நிர்வாகி
(61447)

எமது புதிய
CD வெளியீடுகள்!
" சுப்பஸோவின் "
★ காட்சியும் கானமும் Vol- 6
★ கவுண்டமணி — செந்தில் நகைச்சுவை I, II
★ புதியஒளியும் ஒலியும்
**சுப்பஸோ வீடியோ**
யாழ்ப்பாணம்.
(சி/5844)

எமது ஒறிஜினல்
வீடியோ C. D.
வெளியீடுகள்
- நினைத்தாலே இனிக்கும்
- கேப்டன் பிரபாகரன்
- விடுதலை
- திருவிளையாடல்
- ARMSTRONG

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/5843)

**சாய்ராம் புத்தக நிலையம்**
பிரதான வீதி, சங்கானை.
- போட்டோ பிரதிகள்
- றோனியோ வேலைகள்

மற்றும்
- அடையாள அட்டை கவரிடுதல்
- பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:
**சாய்ராம் புத்தக நிலையம்**
பிரதான வீதி, சங்கானை. (61478)

**நல்லூரில் - குருநகரில்**

புரட்சித் தலைவர்
அமரர்
டாக்டர்
**எம். ஜி. ஆர்**
அவர்களின்
**பதினொராவது ஆண்டு நினைவு நாள்**
டிசெம்பர்
24, 25, 26
★ நாதஸ்வர தவில் இசை
★ நினைவுப் பேருரை
★ பட்டி மன்றம்
★ கவி அரங்கம்
★ நாடகம்
★ நடனம்
★ இன்னிசை கானங்கள்
— மற்றும் விவரங்கள் பின்னர் —
- அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவை.
(சி/5845)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி. 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது